# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 தை 15 செவ்வாய்க்கிழமை 28.01.2025 கதிர் 110



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு -
Yarl Muttram
Youtube Channel



## மாவை அவசர சிகிச்சைப் பிரிவில்



யாழ்ப்பாணம், ஜன 28

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரும் கட்சியின் அரசியல் குழுத் தலைவருமான மாவை சேனாதிராஜா யாழ்ப்பாணம் போதனா வைத்தியசா லையின் அவசர சிகிச்சைப் பிரிவில் இன்று செவ்வாய்க்கிழமை காலை அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அவர் வீட்டில் தவறி வீழ்ந்த நிலையில் தலையில் நரம்பு வெடித்து இரத்தம் கசிந்துள்ளது என்றும், வைத்தியசாலையில் அவருக்குச் செயற்கைச் சுவாசம் அளிக்கப்பட்டுள்ளது என்றும் வைத்தியசாலை தகவல்கள் தெரிவித்தன.

## யாழ். பல்கலையில்

# நிலைமையை வழமைக்குக் கொண்டுவர நாளை அவசரமாகக் கூடுகிறது பேரவை!




யாழ்ப்பாணம், ஜன. 28

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஏற்பட்டுள்ள அவசர நிலைமைகள் குறித்து ஆராய்வதற்காக – பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் வேண்டுகோளுக்கு இணங்க பல்கலைக்கழகப் பேரவை அவசரமாகக் கூடவுள்ளது.

அண்மையில் கலைப்பீட மாணவர்கள் உட்பட ஒன்பது மாணவர்களுக்கு வகுப்புத் தடை விதிக்கப்பட்டமை தொடர்பில் தமது ஆட்சேபத்தை வெளிப்படுத்தும் வகையில் கடந்த 24 ஆம் திகதி முதல் மாணவர்கள் சிலர் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். அதனையடுத்து 25 ஆம் திகதி இடம்பெற்ற பேரவையின் மாதாந்தக் கூட்டத்தின் போது, மாணவர்கள் மீதான தண்டனையைக் கைவாங்கி மாணவர்களின் போராட்டம் முடிவுகக் கொண்டுவரப்பட்டிருந்தது. 7➤

## பருத்தித்துறைக் கடற்பரப்பில் பரபரப்பு


# அத்துமீறிய இந்திய மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படை துப்பாக்கிச்சூடு

## இருவர் காயங்களுடன் வைத்தியசாலையில்



பருத்தித்துறை, ஜன 28

யாழ்ப்பாணம் – பருத்தித்துறைக் கடற்பரப்பில் அத்து மீறி நுழைந்த இந்திய மீன வர்களைக் கைது செய்யும் போது இலங்கைக் கடற்படையினர் நடத்திய துப் பாக்கிப் பிரயோகத்தில் மீனவர்கள் இருவர் காயமடைந்துள்ளனர். அவர்கள் இருவரும் யாழ்ப்பாணம் போதனா வைத் தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:–



## மொட்டு உறுப்பினர்கள் மஹிந்தவுடன் சந்திப்பு

கொழும்பு , ஜன 28

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பிரதிநிதிகளுக்கும் இடையில் விசேட 7➤

## குளவிகள் கொட்டி மாணவன் மரணம்



கொழும்பு , ஜன 28

குளவிக்கொட்டுக்கு இலக்காகி பாடசாலை மாணவன் ஒருவர் 7➤

## காதலியின் கத்திக்குத்தில் காதலன் சாவு



கொழும்பு , ஜன 28

புதிய வேலைக்கான நேர்காணல் தொடர்பான வாக்குவாதத்தின்போது காதலனின் மார்பில் 7➤

### மயக்க மருந்து தெளித்து

## 12 பவுண் நகைகள் கொள்ளையடிப்பு



யாழ்ப்பாணம், ஜன 28

யாழ்ப்பாணத்தில் வீடொன்றுக்குச் சூரிய மின்கலம் திருத்த வேலைக்கு வந்தவர்கள் எனக்கூறி வீட்டில் இருந்தவர்களுக்கு மயக்க மருந்து தெளித்து 7➤

## வெளிநாட்டு ஆசை காட்டி 68 இலட்சம் ரூபா மோசடி

### கைதான ஆசிரியருக்குப் பிணை



கொழும்பு , ஜன 28

வெளிநாட்டுக்கு அனுப்பி வைப்பதாக 68 இலட்சம் ரூபாவை மோசடி செய்த ஆசிரியர் ஒருவர் நீதிமன்ற உத்தரவில் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். 7➤

# விரிவுரைகளை புறக்கணிக்க யாழ். விரிவுரையாளர்கள் முடிவு

யாழ்ப்பாணம், ஜன 28

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் இன்று முதல் காலவரையின்றி விரிவுரைகளை புறக்கணிக்க தீர்மானித்துள்ளனர்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் அவசர கலந்துரையாடலின் பின்னர் குறித்த தீர்மானம் எடுக்கப் பட்டுள்ளது.

இது தொடர்பாக வெளியிடப்பட்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் அறிக்கையில் இவ் விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கையின் முழு வடிவம் வருமாறு,

அண்மையில் இடம்பெற்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பேரவை கூட்டத்தின் பின்னர் பல்கலைக்கழகத்தின் கலை பீடாதிபதி தனது பதவியை ராஜினாமா செய்தார்.

ராஜினாமாவினை அடுத்துப் பல்கலைக்கழகம் பற்றி பல கருத்துக்கள் ஊட கங்களிலும், சமூக ஊடகங்களிலும் வெளியாகி இருந்தன.

இந்த நிலையில் நிலைமை குறித்து கலந்துரையாடும் வகையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் விசேட பொதுக்குழு கூட்டம் திங்கட்கிழமை காலை 10 மணிக்கு கலைப்பீடத்தில் இடம்பெற்றது.

மீறல்களிலும், வன்முறைகளிலும் கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரத்தினை பாதிக்கும் வகையிலும், உடைமைச் சேதங்களை விளைவிப்பதிலும் சீரழிவுமிக்க நடவடிக்கைகளிலும் ஈடுபடும் மாணவர்களுக்கு எதிராக பல்கலைக்கழகத்தின் நிர்வாகம் கடந்த காலத்திலே உறுதியான நடவடிக்கைகளை எடுக்க தவறியமை குறித்து இந்தக் கூட்டத்தில் பல உறுப்பினர்களும் தமது கருத்துக்களை வெளியிட்டனர்.

திட்டமிட்ட முறையில் விசாரணைகளில் தாமதங்கள் ஏற்படுத்தப்பட்டு மாணவர்கள் சட்டத்தின் ஓட்டைகளைப் பயன்படுத்தி தண்டனைகளில் இருந்து தப்பித்துச் செல்ல நிர்வாகம் வழிசமைத்துக் கொடுப்பதாகக் கருத்துக்கள் வெளியிடப்பட்டன.




தண்டனையின் நோக்கம் மாணவர்களை விரோதிப்பது அல்ல மாறாக தாம் செய்யும் தவறுகளை மாணவர்கள் உணர்ந்து எதிர்காலத்திலே செம்மையாகச் செயல்படும் வகையில் ஊக்குவிப்பதே என்பதும் இங்கு சுட்டிக் காட்டப்பட்டது.

கூட்டத்தின் இறுதியில் ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து இன்று திங்கட்கிழமை அன்று பல்கலைக்கழக ஆசிரியர்கள் ஓர் அடையாள வகுப்பு புறக் கணிப்பில் ஈடுபடுவது எனவும், நாளை செவ்வாய்க்கிழமை முதல் தொடர் வகுப்பு புறக்கணிப்பில் ஈடுபடுவதும் எனவும் முடிவெடுக்கப்பட்டது.

1. மோசமான செயல்களில் ஈடுபட்ட மாணவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என ராஜினாமா செய்த கலைப் பீடாதிபதி பேராசிரியர் ரகுராம் அவர்கள் முன்வைத்த கோரிக்கை உடனடியாக ஏற்றுக்கொள்ளப் பட வேண்டும். பேராசிரியர் ரகுராம் தனது பதவி விலகலை வாபஸ் பெற்று மீளவும் பீடாதிபதி பொறுப்பை ஏற்பதற்கு உரிய ஒரு சூழலை பல்கலைக்கழக நிர்வாகம் பல்கலைக்கழகத்திலே ஏற்படுத்த வேண்டும். 2. மாணவர்களுக்கு எதிரான ஒழுக்காற்று நடவடிக்கை தொடர்பாக அண்மையில் இடம்பெற்ற பேரவைக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள் உடனடியாக வாபஸ் பெறப்பட வேண்டும்.

3. மோசமான செயல்களில் ஈடுபட்டமைக்கான ஆதாரங்கள் உறுதியாக இருக்கும் போதிலும், அவற்றைப் பயன்படுத்தி நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் வேண்டுமென்றே கால தாமதங்கள் ஏற்படுத்தல், வேண்டுமென்றே நிருவாகத் தவறுகளை இழைத்தல் போன்ற செயன்முறைகள் மூலம் மீறல்களில் ஈடுபட்ட மாணவர்கள் தண்டனையில் இருந்து தப்புவதற்கு நிர்வாகம் வழிசமைத்துக் கொடுக்கும் போக்கு உடனடியாக முடிவுக்கு கொண்டுவரப்படல் வேண்டும்.

4. இரண்டு மாணவர்கள் கணித புள்ளிவிபரவியல் துறையின் வாயிலில் இருந்த பூட்டினை உடைத்தமை தொடர்பிலே இடம்பெற்ற விசாரணையினை வேண்டுமென்றே தாமதமடையச் செய்த பல்கலைக்கழக நிருவாகிகளுக்கு எதிராக விசாரணை மேற்கொள்ளப்படல் வேண்டும்.

அதே போன்று கலைப் பீடத்தில் இடம்பெற்ற சம்பவங்கள் தொடர்பான விசாரணைகளை வேண்டுமென்றே இழுத்தடிப்போர் மீதும் விசாரணைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். இது தொடர்பிலே பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலையீட்டினையும் கோருவதற்குப் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் தீர்மானித்துள்ளது.

5. கலைப்பீடத்திலும் விஞ்ஞானப் பீடத்திலும் மோசமான செயல்களிலே ஈடுபட்ட மாணவர்களுக்கு எதிராக நடவடிக்கைகள் மேற்கொள்ளுவதில் இருந்து தவறிய பேரவையின் வெளிவாரி உறுப்பினர்களின் மீது எமது ஆசிரியர் சங்கம் நம்பிக்கையினை இழந்துள்ளது. எனவே எல்லா வெளிவாரி உறுப்பினர்களும் தமது பதவிகளை இராஜினாமா செய்ய வேண்டும்.

புதிய உறுப்பினர்கள் பேரவைக்கு நியமிக்கப்பட வேண்டும். இது தொடர்பான சங்கத்தின் விண்ணப்பம் ஒன்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவுக்கும், உயர் கல்வி அமைச்சுக்கும் அனுப்பி வைக்கப்படும்.

மேற்கூறிய ஐந்து கோரிக்கைகளையும் உள்ளடக்கிய கடிதம் ஒன்று பல்கலைக்கழகத்தின் துணைவேந்தருக்கும், எல்லாப் பீடாதிபதிகளுக்கும் ஆசிரியர் சங்கத்தினால், இன்றைய கூட்டத்திலே மேற்கொள்ளப்பட்ட தீர்மானம் ஒன்றுக்கு அமைய அனுப்பிவைக்கப்பட்டது - என்றுள்ளது.

(ஐ)




## 20 வரவேற்பு கருமபீடங்களை உள்ளடக்குவதற்குத் தீர்மானம்

கொழும்பு, ஜன 28

சுற்றுலா பயணிகளின் வருகை அதிகரித்துள்ளதையடுத்து கட்டுநாயக்க விமான நிலையத்தில் குறைந்தது 20 கருமபீடங்களை உள்ளடக்குவதற்கு தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தலைமையில் விமான நிலையத்தில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின் போதே இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

சிவில் விமான போக்குவரத்து அமைச்சகத்தின் அறிக்கையின்படி, கூடுதல்செக்-இன் கவுண்டர்களுக்கான இடங்களை தீர்மானிக்க விமான நிலையத்தில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கலந்துரையாடலின் போது, சிவில் விமான சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க, சுற்றுலாப் பயணிகளின் வருகை வேகமாக அதிகரித்து வருவதால், விமான நிலைய வசதிகளை முடிந்தவரை விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்குமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கினார்.

2028 ஆம் ஆண்டளவில் 12 மில்லியன் விமானப் பயணிகளை ஈர்க்க அரசாங்கம் எதிர்பார்க்கிறது, அதே நேரத்தில் மற்ற சர்வதேச விமான நிலையங்களில் உள்ள நிறுவனங்களையும் இலங்கைக்கு அழைக்க அதிகாரிகள் முடிவு செய்துள்ளனர்.

நாட்டின் முக்கிய வருவாய் ஆதாரமான சுற்றுலாத் துறையை மேம்படுத்துவதை அரசு நோக்கமாகக் கொண்டுள்ளது என்று சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சகம் தெரிவித்துள்ளது. (ஐ)

## மீண்டும் உள்நாட்டு விமான சேவைகளை ஆரம்பிக்க தீர்மானம்

கொழும்பு, ஜன 28




உள்நாட்டு விமான சேவைகளை மீண்டும் ஆரம்பிக்கத் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

கட்டுநாயக்க விமான நிலைய வளாகத்தில் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்க தலைமையில் நடைபெற்ற கலந்துரையாட லின் போது இந்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

சுற்றுலாப் பயணிகளின் வருகை தற்போது கணிசமானளவு அதிகரித்து வரும் நிலையில், விமான நிலையங்களில் வசதிகளை விரிவுபடுத்துவதற்கும் இந்த கலந்துரையாடலின் போது தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் 20 புதிய பதிவு கருமபீடங்களை நிறுவுவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## கைது செய்வதற்கான சதிகள் இடம்பெறுகின்றன

கொழும்பு, ஜன 28

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பிரதிநிதிகளுக்கும் இடையில் கொழும்பு விஜேராம வீதியிலுள்ள மஹிந்த ராஜபக்ஷவின் உத்தியோகப்பூர்வ இல்லத்தில் நேற்று விசேட சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இதன்போது, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களும், சிலிண்டர் சின்னத்தில் கடந்த பொதுத்தேர்தலில் தேர்தலில் போட்டியிட்ட சிலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இந்த சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட பிரேமலால் ஜயசேகர,

தற்போது மஹிந்த ராஜபக்ஷவுடன் தொடர்புடையவர்களைக் கைது செய்வதற்கான சதிகள் இடம்பெறுவதாக தெரிவித்தார்.

மேலும், எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பிலும் மேலும் பல விடயங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டதாக பிரேலால் ஜயசேகர தெரிவித்துள்ளார்.

(ஐ)

# சலுகைகள் குறைக்கப்படவோ அகற்றப்படவோ முடியாது

கொழும்பு, ஜன 28

முன்னாள் அரச தலைவர்களின் சலுகைகள் மற்றும் கொடுப்பனவுகள் குறைக்கப்படுவதற்கான உத்தேச விவாதத்தை அடுத்து, பிவிதுரு ஹெல உறுமய (PHU) தலைவர் உதய கம்மன்பிலவின் கருத்து இது தொடர்பாக மேலும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. அரசியலமைப்பு மற்றும் உலகளாவிய சட்டக் கோட்பாடுகளின்படி அச் சலுகைகள் குறைக்கப்படவோ அல்லது அகற்றப்படவோ முடியாது என அவர் தெரிவித்துள்ளார் .

ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர், தேசிய மக்கள் சக்தியின் (NPP) விஞ்ஞாபனத்தில் குறிப் பிடப்பட்டுள்ள போதிலும், ஓய்வூதிய பலன்களை ரத்து செய்யவோ அல்லது சீரமைக்கவோ முடியாது என்பதை ஜனாதிபதி அனுரகுமார திஸாநாயக்க அறிவார் என்றார்.

“அதாவது NPP அறிக்கையை உருவாக்கிய குழுவில் நியாயமான சட்ட அறிவு உள்ள எவரும் பணியாற்றி யதாகத் தெரியவில்லை,” என்று அவர் கூறினார்.




“ஜனாதிபதியின் பதவியை ஏற்றுக்கொண்டவுடன், அத்தகைய பதவியை வைத்திருப்பவர் அத்தகைய சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளைப் பெறுவதற்கு உரிமையாளராகிவிடுவார். அதன் பின் ஓய்வூதியத்தை பாராளுமன்றம் தீர்மானிக்கும்.

இந்தச் சட்டப்பிரிவைத் தொடர்ந்து செய்யப்படும் எந்தத் திருத்தமும், ரத்துசெய்தலும் அல்லது மாற்ற ியமைக்கப்படுதலும், அதைத் தொடர்ந்து செய்யப்படும் சட்டமும் அல்லது இந்தச் சட்டத்திற்கு முரணான எந்த விதியும் பின்னோக்கிச் செயல்படாது. என அவர் அரசியல மைப்பின் 36 (2) வது பிரிவை மேற்கோள் காட்டினார்.

நியாயமான எதிர்பார்ப்பு கோட்பாட்டின் படி, ஓய்வூ திய பலன்களை இல்லாது செய்தல் போன்று சீரமைக்க முடியாது என்றார்.

“இதற்கு ஒரு காரணம் இருக்கிறது. எதிர்பார்க்கப்படும் ஓய்வூதியப் பலன்களுக்கு ஏற்ப மக்கள் தங்கள் ஓய்வு கால வாழ்க்கையைத் திட்டமிடுகிறார்கள். அதற்கேற்ப பணத்தைச் சேமிக்க முனைகிறார்கள். மக்கள் ஓய்வூதிய பலன்களை எதிர்பார்க்கும் போது, அவர்கள் சேமிப்பதில் ஆர்வம் காட்டுவதில்லை,” என்றார். (ஐ)

# அடிப்படை சம்பளம் அதிகரிப்பு



கொழும்பு, ஜன 28

இந்த ஆண்டு வரவு செலவு திட்டத்தில் அரச ஊழியர்களின் அடிப்படை சம்பளம் அதிகரிக்கப படவுள்ளதாக ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

சர்வதேச சுங்க தினத்தை முன்னிட்டு நேற்று(27) பிற்பகல் சுங்கத் திணைக்கள கேட் போர் கூடத்தில் நடைபெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

யுகத்திற்கு ஏற்ற நிறுவனக் கட்டமைப்பை உருவாக்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்றும், இலங்கை சுங்கம், மதுவரித் திணைக்களம் மற்றும் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் ஆகிய நிறுவனங்களில் கட்டமைப்பு ரீதியான சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படும்.

காலத்தின் சவால்களுக்கு ஏற்ப சட்டம் அல்லது நிறுவனங்கள் மாற வேண்டும் என்றும் எந்தவொரு சட்டமோ அல்லது நிறுவனமோ எக்காலமும் நிலையாக இருக்க முடியாது.

மேலும், கடந்த ஆண்டு சுங்கத்திற்கு வழங்கப் பட்ட பொறுப்பு நிறைவேற்றப்பட்டுள்ளது. பொருளாதாரத்தை சீராக்க சுங்கம் மேற்கொண்ட முன்னெடுப்புகள் பாராட்டத்தக்கவை. கடந்த ஆண்டு சுங்கம் அடைந்த இலக்குகளை நாங்கள் பாராட்டுகின்றோம்.

வீழ்ச்சியடைந்த நாட்டின் பொருளாதாரத்தை, வருவாய் இலக்குகளை அடைவதன் மூலம் மட்டும் மீண்டும் கட்டியெழுப்ப முடியாது. பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்க, வருமான விகிதத்தை அதிகரிக்க வேண்டும். பொருளாதார சரிவு காரணமாக இறக்குமதி மற்றும் ஏற்றுமதி சந்தை சுருங்கியது.

சர்வதேச நாணய நிதியத்தின் அளவீடுகளின்படி நாம் அனைத்து பணிகளையும் மேற்கொள்கிறோம். எனவே, மேலோட்டமாகப் பார்க்கும்போது பொருளாதார தேகம் மீண்டுவிட்டதாகத் தோன்றினாலும், முழு பொருளாதார கட்டமைப்பும் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, பொருளாதார நெருக்கடியை சீராக்க நாம் கவனமாக செயற்பட வேண்டும்.

ஒரு சிறிய தவறு கூட பொருளாதாரத்தில் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தும். எனவே, சுங்கத் திணைக்களம் 2550 பில்லியன் ரூபாய் வருமான இலக்கை எட்டுவதற்கு கூட்டாகச் செயல்பட வேண்டும்.

சுங்கத்திற்கான வசதிகளை வழங்குவது தொடர்பிலும் புதிய சம்பள அளவை ஸ்தாபிப்பது தொடர்பிலும் பரிந்துரைகள் முன்வைக்கப்பட்டன. அது குறித்து நிதியமைச்சு, திறைசேரியுடன் கலந்துரையாடி தீர்வொன்றை வழங்க எதிர் பார்க்கிறேன்.

இந்த ஆண்டு வரவு செலவு திட்டத்தில் அரச ஊழியர்களின் அடிப்படை சம்பளம் அதிகரிக்கப்படவுள்ளது. அரச சேவையை மேலும் திறம்படச் செயற்படுத்த, டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் தொழில்நுட்பத்தை இணைத்துக் கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது. வலுவான நிறுவன கட்டமைப்புகளை உருவாக்குவதற்கான சட்ட சீர்திருத்தங்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுப்போம். முன்னைய அரசியல் தரப்பு மற்றும் அரச சேவை பொறிமுறைக்கு இடையே முரண்பாடுகள் இருந்தன. அந்த கருத்து வேறுபாடுகள் காரணமாக நிறுவன கட்டமைப்பை வலுப்படுத்த அரசியல் தரப்பில் கொண்டு வரப்பட்ட சீர்திருத் தங்களை சரியான நேரத்தில் மேற்கொள்ள முடியவில்லை.

சரியான நேரத்தில் நல்லதொரு நிறுவன கட்டமைப்பை உருவாக்க தவறியதால் எதிர்பார்க்கப்பட்ட பிரதிபலன்கள் கிடைக்கவில்லை. அதனால் நாம் பல விடயங்களை கையகப்படுத்தும் முன்பாக வெளியாட்கள் அவற்றை கைப்பற்றிக் கொண்டனர்.

இதன் விளைவாக, இலங்கையின் இயற்கையான அமைவிடத்தைப் பயன்படுத்துவதற்கான சில வாய்ப்புகளை ஒரு நாடு என்ற வகையில் இழந்திருக்கிறோம்.

எதிர்காலத்தில் இலங்கை துறைமுகத்தில் 113 இலட்சம் கொள்கலன் செயற்பாடுகளை முன்னெடுக்க தேவையான முன்னெடுப்புகள் செய்யப்பட வேண்டும்.

அதற்கான கூட்டு முயற்சியை ஊழியர்கள் மேற்கொள்ள வேண்டும். அவ்வாறு செய்யாமல் நாம் ஒரு நாடாக முன்னோக்கி செல்ல முடியாது. இந்த வருடத்தில் சுங்க திணைக்களத்திற்கு 2550 பில்லியன் ரூபா வருமான இலக்கு வழங்கப்பட்டுள்ளது என குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# நீதிமன்றத்தை நாடிய சிவமோகன்




கொழும்பு, ஜன 28

இலங்கைத் தமிழரசுக் கட்சியில் இருந்து முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் சி.சிவமோகனை இடைநிறுத்தும் தீர்மானத்துக்கு இடைக்காலத் தடை விதிக்க முடியாது என நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

கட்சி விரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டார் என்ற குற்றச்சாட்டின் பேரில் சிவமோகனை தமிழரசுக் கட்சியில் இருந்து இடைநிறுத்தி, அந்த நடவடிக்கைகள் தொடர்பாக அவரிடம் இருந்து விளக்கம் கோரும் முடிவைக் கட்சியின் மத்திய குழு அண்மையில் எடுத்திருந்தது.

அதற்கு எதிராக கடந்த 22ஆம் திகதி யாழ். மாவட்ட நீதிமன்றத்தில் சிவமோகன் சார்பில் வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டது.

அந்த வழக்கில் தமக்கு எதிராக கட்சிக்குள் எடுக்கப்பட்டிருந்த இடைநிறுத்த உத்தரவுக்கு எதி ராக இடைக்காலத் தடை விதிக்கும்படி சிவமோகன் கோரியிருந்தார்.

சட்டத்தரணி குருபரனினால் தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கில் அவர் முன்னிலையாகி நீதிமன்றத்தில் வாதிட்டிருந்தார். ஒரு தரப்பாக சமர்ப்பிக்கப்பட்ட வாதங்களை செவிமடுத்த நீதிபதி எஸ்.சதீஸ்கரன் உத்தரவு வழங்குவதை ஒத்திவைத்திருந்தார்.

குறித்த உத்தரவு நேற்று வழங்கப்பட்ட நிலையில், அதில் இடைக்காலத் தடை விதிக்க முடியாது என்று நீதிபதி தெரிவித்துள்ளார்.

அத்துடன், அத்தகைய வழக்குக்கான அடிப்படை ஏதும் இல்லை என்ற முடிவையும் நீதிபதி தனது உத்தரவில் குறிப பிட்டிருக்கின்றார். எனினும், எதிராளிகளுக்கு அறிவித்தல் அனுப்ப உத்தரவிட்ட நீதிபதி வழக்கை பெப்ரவரி 22ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார். (ஐ)

# கைவிடப்பட்ட நிலையில் அரசுக்குச் சொந்தமான சொகுசு வாகனங்கள்!



கொழும்பு, ஜன 28

கைவிடப்பட்ட நிலையில் காணப்பட்ட அரசுக்குச் சொந்தமான ஏராளம் சொகுசு வாகனங்கள் கொழும்பில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

கொழும்பு - 07இல் அமைந்துள்ள சிராவஸ்தி மாளிகையில் கைவிடப்பட்ட நிலையில் அரசாங்கத்துக்குக் சொந்தமான ஏராளம் வாகனங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஆடம்பர பீ.எம்.டப்ளியூ கார்கள் தொடக்கம் மொண்டரோ உள்ளிட்ட பல்வேறு சொகுசு வாகனங்கள் கைவிடப்பட்ட நிலையில் அங்கு, துருப்பிடித்தும் சிதிலமடைந்தும் காணப்படுகின்றன.

சிராவஸ்தி மாளிகையை நாடாளுமன்ற உறுப்பினர்களின் தங்கு விடுதியாக பயன்படுத்தும் நோக்கில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் போது இந்த விடயம் கண்டறியப்பட்டுள்ளது.

இந்த மாளிகை முன்னைய காலத்தில் மேல் மாகாண சபையின் பிரதான அலுவலகமாக பயன்படுத்தப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# புலி தாக்கி இறந்த பெண்ணின் குடும்பத்தினரை சந்தித்து ஆறுதல் தெரிவித்த பிரியங்கா காந்தி




இன்று வயநாடு வருகை தந்த பிரியங்கா காந்தி புலி தாக்கி இறந்த பெண்ணின் குடும்பத்தினரை சந்தித்து ஆறுதல் தெரிவித்துள்ளார்.

கேரள மாநிலம் வயநாடு மாவட்டம் மானந்தவாடி அருகே உள்ள பஞ்சரக் கொல்லி பகுதியை சேர்ந்த வனக்காவலர் அச்சப்பன் என்பவரின் மனைவி ராதா கடந்த 24-ஆம் திகதி காபி பறித்துக் கொண்டிருந்த போது புலி தாக்கி கொலலப்பட்டார். அந்த புலியை பிடிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த வனக்குழுவை சேர்ந்த ஜெயசூர்யாவும் புலியின் தாக்குதலுக்கு உள்ளானார். இதையடுத்து அந்த புலி ஆட்கொல்லி புலி என்று அறிவிக்கப்பட்டது. மேலும் அந்த புலியை சுட்டுப்பிடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இந்தநிலையில் பெண்ணை கொன்ற ஆட்கொல்லி புலி, பிலாக் காவு அருகே உள்ள வனப்பகுதியில் இறந்து கிடந்தது. 7 வயது பெண் புலியான அது எப்படி இறந்தது? என்று விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

இந்தநிலையில் புலி தாக்கி இறந்த ராதாவின் குடும்பத்தினரை சந்திக்க வயநாடு தொகுதி எம்.பி.யான பிரியங்கா காந்தி இன்று வயநாடு வருகிறார். டெல்லியில் இருந்து விமானம் மூலமாக கேரளா கண்ணூர் சர்வதேச விமான நிலையத்துக்கு இன்று மதியம் வருகிறார்.

பின்பு சாலை மார்க்கமாக மானந்தவாடிக்கு செல்கிறார். அங்கு அவர் புலி தாக்கி பலியான ராதாவின் வீட்டுக்கு சென்று, அவரது குடும்பத்தினரை சந்தித்து ஆறுதல் கூறுகிறார்.

பின்பு கல்பெட்டாவில் உள்ள கலெக்டர் அலுவலகத்தில் மதியம் நடக்கும் உயர் அதிகாரிகள் ஆலோசனை கூட்டத்திலும் பிரியங்கா காந்தி பங்கேற்கிறார்.

அதன்பிறகு மேப்பாடியில் நடக்கும் பொதுக்கூட்டத்திலும் பிரியங்காகாந்தி பங்கேற்பார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்பிறகு விமான நிலையத்துக்கு வந்து டெல்லி புறப்பட்டு செல்கிறார்.

# ஆந்திராவில் கியாஸ் சிலிண்டர் வெடித்ததில் இருவர் பேர் பலி!



ஆந்திராவில் கியாஸ் சிலிண்டர் வெடித்ததில் இருவர் பேர் பலியான சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஆந்திர மாநிலம், நந்தியால் அடுத்த சார்பு ரேவூவில் உள்ள ஒரு குடும்பத்தினர் வீட்டில் தூங்கிக்கொண்டு இருந்தனர். இன்று அதிகாலை வீட்டில் சமையல் அறையில் இருந்த கியாஸ் சிலிண்டர் திடீரென அதிக சத்தத்துடன் வெடித்தது.

இந்த விபத்தில் வீடு முழுவதும் தீ பரவியது. இதில் சுப்பம்மா (வயது 60), தினேஷ் (10) ஆகியோர் உடல் கருகி சம்பவ இடத்திலேயே பரிதாபமாக இறந்தனர்.மேலும் 8 பேர் படுகாயம் அடைந்தனர்.

சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் படுகாயம் அடைந்தவர்களை மீட்டு சிகிச்சைக்காக நந்தியால் அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். பலியானவர்கள் உடல்களை பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர்.

சம்பவம் தொடர்பாக பொலிஸார் வழக்கு பதிவு செய்து மேலதிக விசாரணைகளைமேற்கொண்டு வருகின்றனர் .



# இன்போசிஸ் இணை நிறுவனர் க்ரிஸ் கோபாலகிருஷ்ணன் மீது வழக்கு!

இன்போசிஸ் நிறுவனத்தின் துணை நிறுவனர் சேனாபதி க்ரிஸ் கோபாலகிருஷ்ணன் உள்பட 17 பேர் மீது வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் பெங்களூர் பொலிஸார் வழக்கு பதிவு செய்துள்ளனர்.

போவி என்ற பழங்குடியினத்தைச் சேர்ந்த துர்க்ப்பா என்பவர் இவர் மீது அளித்த புகாரின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளார்.

அந்த புகாரில் , 2014-ம் ஆண்டு நான் இந்திய அறிவியில் மையத்தின் தொழில்நுட்ப பிரிவில் பேராசிரியராக பணிபுரிந்தேன். அப்போது இந்திய அறிவியல் நிறுவன வாரிய உறுப்பினராக இருந்த கோபாலகிருஷ்ணன், என் மீது பொய் குற்றச்சாட்டுகளை கூறி பணி நீக்கம் செய்தார். இது தொடர்பாக சாதிய ரீதியில் அவதூறுகள், அச்சுறுத்தல்களுக்கும் ஆளானேன், என்று கூறி உள்ளார்.

துர்கப்பாவின் புகாரைத் தொடர்ந்து பெங்களூரு சதாசிவநகர் பொலிஸ் நிலையத்தில் வழக்குப்பதிவு செய்யப்பட்டு உள்ளது. இன்போசிஸ் துணை நிறுவனர் சேனாபதி க்ரிஷ் கோபாலகிருஷ்ணன் மீது வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்கு பதியப்பட்டு உள்ளது.

இவர்மட்டுமின்றி, கோவிந்தன்ரங்கராஜன், ஸ்ரீதர் வாரியர், சந்தியா விஸ்வேஸ்வரய்யா, ஹறி உள்ளிட்ட 17 பேர் மீதும் வழக்கு பதிவு செய்யப்பட்டு இருக்கிறது.

# டெல்லி சட்டசபை தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் குறித்து வெளியான தகவல்!

டெல்லி சட்டசபை தேர்தலில் போட்டியிடும்46 சதவீத வேட்பாளர்கள் பள்ளிப்படிப்பை தாண்டாதவர்கள் என திடுக்கிடும் தகவல் வெளியாகியுள்ளது.

டெல்லி சட்டசபை தேர்தல் பெப்ரவரி 5-ஆம் திகதி நடபெறவிருகின்றது. 70 தொகுதிகளிலும் மொத்தம் 699 வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்கள். அவர்கள் வேட்புமனுவுடன் தங்களது கல்வித்தகுதியையும் குறிப்பிட்டு உள்ளனர். அந்த விவரங்களை ஆய்வு செய்து, ஜனநாயக சீர்திருத்த சங்கம் என்ற அமைப்பு அறிக்கை வெளியிட்டுள்ளது.

அதில், 46 சதவீத வேட்பாளர்கள், அதாவது 324 வேட்பாளர்கள் பள்ளிப் படிப்பை தாண்டாதவர்கள் என்று தெரிய வந்துள்ளது. 5-ம் வகுப்பில் இருந்து 12-ம் வகுப்புக்குள்தான் அவர்கள் படித்துள்ளனர். இன்னும் 322 வேட்பாளர்கள் உயர்கல்வி படித்துள்ளனர். அவர்களில், 126 பேர் இளங்கலை பட்டப்படிப்பும், 104 பேர் முதுகலை பட்டப்படிப்பும், 84 பேர் தொழில்நுட்ப படிப்பும், 8 பேர் ஆய்வுப்படிப்பும் படித்துள்ளனர்.

18 பேர் டிப்ளமோ படித்துள்ளனர். 6 பேர், முறையான பள்ளிப்படிப்பு இல்லாமல் படித்திருப்பதாகவும், 29 பேர் தங்களை படிப்பறிவு இல்லாதவர்கள் என்றும் கூறியுள்ளனர்.



# பிரிட்டன் குழந்தைகள்

## மகிழ்ச்சியாக இல்லை!



பிரிட்டனில் வாழும் குழந்தைகளும் இளைஞர்கள் - யுவதிகளும் மகிழ்ச்சியில்லாமலும் வாழ்க்கையில் திருப்தி அடையாமலும் வாழ்கின்றனர். அதே வயதுகளில் ஐரோப்பியக் கண்டத்தின் பிற நாடுகளில் வாழும் குழந்தைகளிடமும் இளைஞர்களிடமும் நடத்திய ஆய்வுகள் மூலம் இது தெரியவந்திருக்கிறது. 'த சில ட்ரன்ஸ் சொசைட்டி' என்ற அறக்கட்டளை நிறுவனம் 'த குட் சைல்ட்ஹூட் ரிபோர்ட்-2024' என்ற பெயரில் இந்த அறிக்கையை வெளியிட்டிருக்கிறது.

பத்து வயது முதல் பதினேழு வயது வரையிலான குழந்தைகளில் 11மூ பேர், தங்களுடைய வாழ்க்கை வசதியாக இல்லை என்று தெரிவித்துள்ளனர். ஆறில் ஒரு பங்கு குழுவினர் வீடுகளில் விலைவாசி உயர்வு காரணமாக குடும்பச் செலவுக்குப் பணம் போதாமல் தவிக்கின்றனர், எனவே வாழ்க்கை திருப்தியாக இல்லை என்கின்றனர்.

முந்தைய தலைமுறைகளுடன் ஒப்பிடுகையில் இப்போதைய தலைமுறை ஏன் மகிழ்ச்சியோ உற்சாகமோ இல்லாமல் இருக்கிறார்கள் என்பதற்கான காரணங்கள் ஆய்வுசெய்யப்படுகின்றன.

ஒன்றல்ல. மூன்று ஆய்வறிக்கைகள்.

மூன்று நிறுவனங்களின் ஆய்வறிக்கைகள் இதை உறுதிப்படுத்தியுள்ளன. ஐந்து குழந்தைகளில் இரண்டு குழந்தைகள் அதாவது 40மூ குழந்தைகள் விலைவாசி உயர்வது குறித்து மிகவும் வருத்தப்படுகின்றனர். அது அவர்களுடைய விளையாட்டு, கல்வி, பொழுதுபோக்கு, உணவு, உடை என்று எல்லாவற்றையும் நேரடியாகவே பாதிக்கிறது.

தங்களுக்குப் பள்ளிக்கூடமே பிடிக்கவில்லை என்று 14மூ குழந்தைகள் தெரிவித்துள்ளனர். இதற்கு முன்னர் இப்படியொரு ஆய்வு 2009இல் நடந்தது. மகிழ்ச்சியாக இல்லை என்று கூறியவர்களில் பெண் குழந்தைகள் தான் அதிகம்.

"பொதுவாக பிரிட்டனில் குழந்தைகளுக்கு வாழ்க்கையில் சலிப்போ மகிழ்ச்சிக் குறைவோ ஏற்பட்டதாக இதுவரை கேள்விப்பட்டதே இல்லை. இந்த அறிக்கையைத் தயாரித்து படித்துவிட்டு நாங்களே மிகவும் அதிர்ச்சியில் ஆழ்ந்துவிட்டோம்" என்கிறார் அறக்கட்டளையின் தலைமை நிர்வாகி மார்க் ரஸ்ஸல்.

2009க்குப் பிறகு குழந்தைகளுடைய மகிழ்ச்சி பல்வேறு அம்சங்கள் தொடர்பாக குறைந்துகொண்டேவந்திருக்கிறது. குழந்தைகளுக்கு வாய்க்கும் நண்பர்கள், குழந்தைகளுடைய தோற்றம், பள்ளிக்கூடம், பள்ளிக்கூடத்தில் அளிக்கும் பாட வேலைகள் என்று பல அம்சங்கள் இந்த மகிழ்ச்சி குறைய காரணங்களாக இருக்கின்றன. பெரும்பாலான குழந்தைகளுக்கு அவரவர் குடும்பச் சூழல் மகிழ்ச்சிகரமாகவே தொடர்கிறது என்பது ஆறுதல் தருகிறது.

குழந்தைகள், தங்களுடைய குடும்பச் சூழல் மிகுந்த மகிழ்ச்சியைத் தருவதாக கூறியிருந்ததுடன் தங்களுடைய தோற்றம் பற்றி அதிகம் கவலைப்படவே இல்லை. இந்த முறை அதில் பெரிய மாறுதல் ஏற்பட்டிருக்கிறது. இதற்குக் காரணம் சமூக ஊடகங்கள்தான் என்கிறார் ரஸ்ஸல். சமூக ஊடகங்களில் வெவ்வேறு ஊர்கள், நாடுகளைச்சேர்ந்த குழந்தைகளையும்மற்றவர்களையும் படங்களாகப் பார்க்கின்றனர். அவர்களுடைய தோற்றம், உடை, அழகு ஆகியவை போலத் தங்களுக்கு இல்லை என்று மனச்சோர்வு அடைகின்றனர்.

'குழந்தைகளை வெளியூருக்கு அழைத்துச் சென்றால் மாறுதல் ஏற்படும் - மகிழ்ச்சி அடைவார்கள், ஆனால் அதற்குப் பணம் இல்லையே?' என்று 50மூ பெற்றோர் சுட்டிக்காட்டியுள்ளனர். 'வெளியூர் பயணம் வேண்டாம், உள்ளூரிலேயே அவர்கள் விரும்பும் விளையாட்டு, பாட்டு, நடனம் என்று பிற பொழுதுபோக்குகளுக்கு மாதச் சந்தா கொடுக்கக்கூட பணம் இல்லாமல் விலைவாசி உயர்ந்துகொண்டேவருகிறது' என்று அவர்களில் பலர் சுட்டிக்காட்டுகின்றனர். பிரிட்டனில் உள்ள குழந்தைகளின் மகிழ்ச்சியற்ற வாழ்க்கைக்கும் மனச்சோர்வுக்கும் 2019இல் ஏற்பட்ட கோவிட் பெருந்தொற்று நோயும், சமீபகாலமாக மக்களுடைய வாழ்க்கையை ஆக்கிரமித்துவரும் சமூக ஊடகங்களும் முக்கிய காரணங்கள் என்கிறார்கள். இவ்விரண்டும் பிரிட்டனை மட்டுமல்ல பிற ஐரோப்பிய நாடுகளையும் பாதித்தனவே என்கிறார் ரஸ்ஸல்.

வாழ்க்கை திருப்திகரமாக இல்லை என்று 15 வயதுக் குழந்தைகளில் 25மூ பேர் பிரிட்டனிலும், 7மூ பேர் டச்சு (ஹாலந்து - நெதர்லாந்து) நாட்டிலும் தெரிவித்துள்ளனர்.

விகிதாசாரப்படி பார்த்தால், பிற ஐரோப்பிய நாடுகளைவிட பிரிட்டனில் ஏழைக் குழந்தைகள் அதிகம் என்கிறார் ரஸ்ஸல். பிரிட்டனில் 43 லட்சம் குழந்தைகள் அதாவது 30% குழந்தைகள் வறிய குடும்பத்தில்தான் வாழ்கின்றனர். பிரிட்டனின் சராசரி தனிநபர் வருமானத்தில் 60மூக்கும் குறைவாகப் பெறும் குடும்பங்களை, 'வறிய குடும்பங்க'ளாக அரசு அறிவித்துள்ளது. நெதர்லாந்தில் (டச்சு - ஹாலந்து) 12.7% குழந்தைகள் வறுமையில் வாடுவதாக 2021 அறிக்கை தெரிவிக்கிறது.

பிற ஐரோப்பிய நாடுகளுடன் ஒப்பிடுகையில் பிரிட்டனில் பொருளாதாரம் சார்ந்த துயரங்கள் அதிகம். நாட்டை இதற்கும் முன்னால் ஆண்ட கன்சர்வேடிவ் கட்சி, நிதிப் பற்றாக்குறையைக் குறைப்பதற்காக அரசின் செலவுகளைக் குறைத்துக்கொண்டேவந்தது. 2013இல் ஒக்ஸ்ஃபாம் நடத்திய ஆய்வும் இதை உறுதிப்படுத்துகிறது. சிக்கன நடவடிக்கையாக அரசுப் பள்ளிக்கூடங்களுக்கு ஒதுக்கப்படும் நிதியளவும் சுகாதாரச் செலவுகளும் வெட்டப்பட்டேவந்தன. இவை போக, பிற சமூக நல்வாழ்வுச் செலவுகளும் படிப்படியாக குறைக்கப்பட்டன.

இதன் காரணமாக அனைத்து வருவாய்ப் பிரிவு மக்களும் அடிக்கடி போய்வந்த நூலகம், சமூக சமுதாயக் கூடங்கள், இளைஞர் மையங்கள் போன்ற பொது இடங்களில் பல மூடப்பட்டன. இதைக் கடுமையான வறுமை, மனித உரிமைகள் மீறலுக்கான ஐக்கிய நாடுகள் சபையின் முன்னாள் சிறப்புப் பிரதிநிதி 2018 இல் ஓர் அறிக்கையில் சுட்டிக்காட்டியிருந்தார்.

அதுபோக, பிரிட்டனில் கல்விமுறையானது அனைத்து குழந்தைகளுக்குமானது அல்ல என்கிறார் ரஸ்ஸல். பின்லாந்து, ஹாலந்து நாடுகளைவிட பிரிட்டனில் குழந்தைகளுக்கு மாதாந்திர டெஸ்ட், வாராந்திர டெஸ்ட், காலாண்டுத் தேர்வு, அரையாண்டுத் தேர்வு என்று தொடர்ந்து தேர்வுகளாகவே நடத்தும் வழக்கம் இருக்கிறது. இதனால் பள்ளிக்கூட மாணவர்கள் நிம்மதி இழக்கின்றனர்.

ஏட்டுக் கல்வியும் தொழில் கல்வியும் ஒரே வகையில் மதிப்பிடப்பட வேண்டும் என்கிறார் ரஸ்ஸல். ஏட்டுக் கல்வியுடன் குழந்தைகளின் மனமகிழ்ச்சிக்கும் சமூக வளர்ச்சிக்கும் முக்கியத்துவம் தர வேண்டும் அப்போது தான் குழந்தைகள் பள்ளிக்கூடத்துக்கு தினந்தோறும் வந்தாலும் அவர்களுடைய மனம் பாடங்களில் ஒன்றும் என்கிறார்.

ஆண் குழந்தைகளைவிட அதிக எண்ணிக்கையில் பெண் குழந்தைகள் கவலைப்படுகின்றனர். தங்களுடைய குடும்பச் சூழல், தங்களுடைய தோற்றம், தங்கள் பள்ளியின் கெடுபிடிகள் ஆகியவற்றை நினைத்து அதிகம் வருந்துகின்றனர். மாணவர்களில் 20மூ, மாணவிகளில் 31மூ தங்களுக்கு, வாழ்க்கை திருப்தியாக இல்லை என்று கூறியுள்ளனர். வளர்ச்சிக்கான பொருளாதார ஒத்துழைப்பு அமைப்பு (ஓஇசிடி) என்ற அமைப்பு 2022இல் எடுத்த ஆய்வும் இதைத் தெரிவிக்கிறது. பெண் குழந்தைகள் ஏன் அதிகம் கவலைப்படுகின்றனர் என்பதை அரசும் சமூகமும் கவனிக்க வேண்டும் என்கிறது அறிக்கை.

பெண் குழந்தைகளைப் பற்றி வீடுகளில் என்ன பேசுகிறார்கள், வெளியில் என்ன பேசுகிறார்கள் என்பதைப்போல உடன் படிக்கும் மாணவர்கள் அவர்களிடம் எப்படி நடந்துகொள்கின்றனர் என்பதும் இந்தக் கவலைகளுக்கும் மகிழ்ச்சியற்ற நிலைக்கும் முக்கிய காரணமாகத் தெரிகிறது. ஆண் குழந்தைகள், பெண் குழந்தைகளைக் கேலிசெய்வது, மிரட்டுவது, அவமானப்படுத்துவது காரணமாக பெண் குழந்தைகளுக்குக் கவலையும் வருத்தமும் அதிகமாகிறது.

ஒரு குழந்தை மகிழ்ச்சியாக இருக்கிறதா, இல்லையா என்பதை அளவிட இதுவரை பொதுவான வழிமு றையோ, உத்தியோ இல்லை. கேள்விக் கேட்டு பெறப்படும் பதில்கள் அடிப்படையில் இது தீர்மானிக்கப்படுகிறது. ஆனால், குழந்தைகள் வீடுகளிலும் பள்ளிக்கூடங்களிலும் பொதுஇடங்களிலும் புறக்கணிக்கப்படுவது அல்லது ஒதுக்கப்படுவது, மோசமாக நடத் தப்படுவது ஆகியவற்றையும் ஆய்வுகளில் சேர்த்து ஒருங்கிணைந்த ஆய்வு நடத்தப்பட வேண்டும் என்று அரசுக்கு யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

தங்களுடைய குடும்ப அரவணைப்பு, நண்பர்களின் ஆதரவு, உருவத் தோற்றம் குறித்த சுயமதிப்பீடு, பள்ளிக்கூடத்தின் தன்மை, பள்ளிக்கூடத்தில் தரப்படும் வீட்டுப்பாட வேலைகள் என்று ஒவ்வொன்றாக யோசித்து, திருப்தி இருந்தால் அதிகபட்சம் 7 மதிப்பெண்களும் குறைவாக இருந்தால் பூஜ்யம் அல்லது ஒன்று முதல் ஏழு வரை ஏதாவதொரு எண்ணும் தருமாறு மாணவர்களிடம் கூறப்பட்ட பிறகே ஆய்வு நடத்தப்பட்டது.

தேசிய அளவில் குழந்தைகளின் நலனுக்காக புதிய நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டும்.

ஒவ்வொரு பள்ளிக்கூடத்துக்கும் உடல் நல - மனநல நிபுணரை அரசு அனுப்பிவைக்க வேண்டும். தேசிய சுகாதார திட்டத்தில் இதைச் சேர்ப்பதாக பிரதமர் கீர் ஸ்டார்மர் உறுதியளித்திருக்கிறார்.

பெண் குழந்தைகளுக்கு ஏன் அதிகக் கவலை என்று மேலும் அதிகமாக தகவல்களைப் பெற்று உரிய பரிகார நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

ஒரு குடும்பத்தில் இரண்டு குழந்தைகளுக்கு மேல் பெற்றால் அரசின் மானிய உதவிகள் கிடையாது என்ற திட்டத்தை அரசு கைவிட வேண்டும். எத்தனை குழந்தைகள் இருந்தாலும் அனைத்துக் குழந்தைகளுக்கும் அரசின் உதவிகள் வழங்கப்பட வேண்டும். அரசின் இந்தக் கட்டுப்பாட்டால் மூன்றாவது, நான்காவது என்று பிறந்த குழந்தைகள் கிட்டத்தட்ட 16 லட்சம் பேர் பாதிப்படைந்துள்ளனர்.

பள்ளிக்கூட சூழல்கள் மேம்படுத்தப்பட வேண்டும். வலுத்த மாணவன் இளைத்த மாணவனை மிரட்டுவது, அடிப்பது, அவமானப்படுத்துவது போன்றவை தடுக்கப்பட வேண்டும்.

குழந்தைகள் இணைந்து விளையாடவும் சேர்ந்து சமூக, கலாசார நிகழ்ச்சிகளில் பங்கேற்கவும் அதிக வாய்ப்புகள் தரப்பட வேண்டும்.

பெற்றோர், ஆசிரியர் தவிர பள்ளிக்கூட குழந்தைகள் நம்பிக்கையோடு பழக மூன்றாவது தரப்பினரும் அவசியம் என்கிறார் ரஸ்ஸல்.

பல குழந்தைகளுக்கு பெற்றோர் வேலைக்குப் போவதாலும் ஆசிரியர்களுக்கு நேரம் இல்லாமல் போவதாலும் மூன்றாவது தரப்பு நபர்களை அணுக அச்சமாக இருக்கிறது. இதனால் அவர்கள் மொபைல் போனில் சமூக ஊடகங்களில் அதிகம் மூழ்குகின்றனர்.

இது அவர்களுக்கு மனமகிழ்ச்சியை அளிப்பதற்குப் பதிலாக அவர்களுடைய ஆளுமையை குறைத்து மதிப்பிடவைத்து, சோகத்தில் தள்ளுகிறது என்று சுட்டிக்காட்டுகிறார் ரஸ்ஸல்.

குழந்தைகளின் குறைகளைக் கேட்கவும் அவர்களுக்கு நல்ல அறிவுரைகளைக் கூறி உற்சாகமூட்டவும் அரசு அதிக முதலீடுகளைச் செய்ய வேண்டும் என்கிறார்.

# லாவோசில் கடத்தப்பட்ட 67 இந்தியர்கள் மீட்பு- தாயகம் அனுப்ப நடவடிக்கை!



லாவோசில் கடத்தப்பட்ட 67 இந்தியர்களை மீட்டு தாயகம் அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டு வருகின்றன.

கிழக்கு ஆசிய நாடான லாவோசில் ஏராளமான இந்தியர்கள் பணியாற்றி வருகின்றனர். இவர்களை அங்குள்ள பாதாள உலகக்கும்பல் கடத்திச்செல்வது அடிக்கடி நடந்து வருகிறது.

அந்தவகையில் லாவோசின் பல்வேறு பகுதிகளில் தங்கியிருந்த இந்தியர்கள் 67 பேர் மோசடி கும்பலால் கடத்தப்பட்டு போகியோ மாகாணத்தில் உள்ள சைபர் மோசடி மையங்களில் பணியமர்த்தப்பட்டு இருந்தனர்.

அந்த கும்பலால் பல்வேறு துயரங்களை அனுபவித்து வந்த இந்தியர்கள், தங்களை மீட்குமாறு தலைநகர் வியான்டியானில் உள்ள இந்திய தூதரகத்துக்கு தகவல் கொடுத்ததைத் தொடர்ந்து தூதரக அதிகாரிகள் லாவோஸ் பாதுகாப்பு அதிகாரிகளின் துணையுடன் ஒரு குழுவை அந்த மையங்களுக்கு அனுப்பி வைத்தனர்.

இந்நிலையில் அவர்கள் அதிரடியாக செயல்பட்டு 67 இந்தியர்களையும் பத்திரமாக மீட்டனர். பின்னர் அவர்கள் வியான்டியானுக்கு அழைத்து வரப்பட்டனர். அங்கு பாதுகாப்பாக தங்க வைக்கப்பட்டு உள்ள அவர்களை இந்திய தூதர் பிரசாந்த் அகர்வால் சந்தித்து ஆறுதல் தெரிவித்தார். மேலும் அவர்களது அனுபவங்களை கேட்டறிந்த அவர், இந்த கடத்தலுக்கு உடந்தையாக இருந்த ஏஜென்டுகள் மீது புகார் அளிக்க நடவடிக்கை எடுப்பதாகவும், விரைவில் நாடு திரும்புவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் உறுதியளித்தார்.

இதைத்தொடர்ந்து மீட்கப்பட்ட இந்தியர்கள் அனைவரையும் இந்தியாவுக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இது தொடர்பாக இந்திய தூதரக அதிகாரிகள் லாவோசில் உள்ள சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் இணைந்து செயல்பட்டு வருகின்றனர். தற்போது மீட்கப்பட்டுள்ள 67 பேரையும் சேர்த்து மொத்தம் 924 இந்தியர்கள் இதுவரை ரவுடி கும்பலிடம் இருந்து மீட்கப்பட்டு உள்ளதாகவும், இதில் 857 பேர் பாதுகாப்பாக இந்தியாவுக்கு அனுப்பி வைக்கப்பட்டு இருப்பதாகவும் இந்திய தூதரகம் கூறியுள்ளது.

அதேவேளை தாய்லாந்துக்கு பணிக்கு அனுப்பி வைப்பதாக வெளியாகும் தகவல்களை குறித்தும், இந்த ஏஜென்டுகளை குறித்தும் கவனமாக இருக்குமாறு இந்தியர்களை லாவோசில் உள்ள இந்திய தூதரகம் அறிவுறுத்தி உள்ளது.



## பெப்ரவரியில் அமெரிக்க அதிபர் டிரம்பை சந்திக்கிறார் பிரதமர் மோடி?

பிரதமர் நரேந்திர மோடி பெப்ரவரி மாதம் வெள்ளை மாளிகையில் வைத்து தன்னை சந்திப்பார் என்று அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் கூறியுள்ளார்.

"இன்று காலை அவருடன் நீண்ட நேரம் பேசினேன். அவர் அடுத்த மாதம், அநேகமாக பெப்ரவரியில் வெள்ளை மாளிகைக்கு வருவார். இந்தியாவுடன் எங்களுக்கு நல்ல உறவு இருக்கிறது," என்று டிரம்ப் கூறினார்.

முதல் முறை அதிபராக பதவி வகித்த போது, டொனால்டு டிரம்ப் கடைசியாக இந்தியாவுக்கு தான் வெளிநாட்டுப் பயணம் மேற்கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

அதிபர் டிரம்ப் மற்றும் பிரதமர் மோடியும் இடையே நல்ல நட்புறவு நீடிக்கிறது. இருவரும் கடந்த செப்டம்பர் 2019-ல் ஹூஸ்டனில் நடந்த இரண்டு வெவ்வேறு பேரணிகள் மற்றும் கடந்த பெப்ரவரி 2020-ல் அகமதாபாத்தில் ஆயிரக்கணக்கான மக்களிடம் உரையாற்றினர்.

2024 நவம்பர் மாதம் அதிபர் தேர்தலில் டொனால்டு டிரம்ப் வெற்றி பெற்றதும் அவருடன் பேசிய முதல் மூன்று உலகத் தலைவர்களில் பிரதமர் மோடியும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## பங்களாதேஷ் பாகிஸ்தான் இடையே நேரடி விமான சேவை ஆரம்பம்!



பங்களாதேஷ் பாகிஸ்தான் இடையே விரைவில் நேரடி விமான சேவை ஆரம்பமாகும் என பாகிஸ்தானுக்கான பங்களாதேஷ் உயர் ஆணையர் இக்பால்/ஹுசைன் தெரிவித்துள்ளார்.

பாகிஸ்தானின் ஒரு பகுதியாக இருந்த பங்களாதேஷ் 1971-ல் தனிநாடாக சுதந்திரம் பெற்றதனையடுத்து இரு நாடுகளும் மோதல் போக்கையே கடைபிடித்து வந்தன. ஆனால் பங்களாதேஷில் ஆட்சி மாற்றம் ஏற்பட்ட பின்னர் இரு நாடுகள் இடையேயான உறவில் சுமூக நிலை காணப்படுகிறது. அதன்படி இரு நாடுகளுக்கும் இடையே நேரடி கப்பல் போக்குவரத்து சமீபத்தில் தொடங்கியது.

இந்தநிலையில் பாகிஸ்தானுக்கான பங்களாதேஷ் உயர் ஆணையர் இக்பால் ஹுசைன் பாகிஸ்தான் சுற்றுப்பயணம் மேற்கொண்டார். அப்போது இரு நாடுகளுக்கும் இடையே நேரடி விமான சேவை குறித்து ஆலோசனை நடத்தப்பட்டது.

இதனையடுத்து தலைநகர் டாக்காவில் இருந்து கராச்சி வழியாக இங்கிலாந்துக்கு விமானத்தை இயக்க பங்களாதேஷ் விமான நிறுவனமான பிமான் ஏர்லைன்ஸ் திட்டமிட்டுள்ளது. இதன்மூலம் இரு நாடுகள் இடையேயான உறவு மேலும் வலுப்படும் என இக்பால் தெரிவித்துள்ளார்.

## அமெரிக்க அதிபர் டிரம்பை சந்திக்க இஸ்ரேல் பெஞ்சமின்நேதன்யாகு திட்டம்?

இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகு அடுத்த வாரம் அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்பை சந்திக்க திட்டமிட்டு வருவதாக தி டைம்ஸ் ஆஃப் இஸ்ரேல் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்நிலையில் இதற்காக அவர் வாஷிங்டன் டி.சி.க்கு பயணம் செய்ய திட்டமிட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

இந்த பயணம் இறுதி செய்யப்படவில்லை என்றும் அவர் புரோஸ்டேட் அறுவை சிகிச்சை செய்து கொண்டு குணமடைவதால் நேதன்யாகுவின் உடல்நிலையை பொறுத்து இதுகுறித்த இறுதி முடிவு எடுக்கப்படும் என்று கூறப்பட்டுள்ளது.

தற்போதைய தகவல்களின் படி பயணம் செய்தால், தனது இரண்டாவது பதவிக்காலத்தில் அதிபர் டொனால்டு டிரம்பை சந்திக்கும் முதல் வெளிநாட்டுத் தலைவராக நேதன்யாகு இருப்பார். முன்னதாக இஸ்ரேலுக்கு தற்காப்பு கருவிகள் வழங்கியதற்காக அதிபர் டிரம்பிற்கு பெஞ்சமின் நேதன்யாகு ஜனவரி 26-ஆம் திகதி நன்றி தெரிவித்தார்.

இது குறித்த எக்ஸ் தள பதிவில் அவர், "இஸ்ரேலுக்கு தன்னைத் தற்காத்துக் கொள்ளவும், நமது பொதுவான எதிரிகளை எதிர்கொள்ளவும், அமைதி மற்றும் செழிப்பு நிறைந்த எதிர்காலத்தைப் பாதுகாக்கவும் தேவையான கருவிகளை வழங்குவதாக நீங்கள் அளித்த வாக்குறுதியைக் காப்பாற்றியதற்காக அதிபர் டிரம்பிற்கு நன்றி" என்று குறிப்பிட்டுள்ளார்.



## அத்துமீறிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பருத்தித்துறைக் கடற்பரப்பில் இன்று செவ்வாய்க்கிழமை அதிகாலை 13 இந்திய மீனவர்களுடன் படகு ஒன்று அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டது.

அதன்போது கடல் சுற்றுக்காவல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இலங்கைக் கடற்படையினர், இந்திய மீனவர்களைக் கைது செய்யும் நோக்குடன் அவர்களின் படகில் ஏறிய வேளை, படகில் ஏறிய ஒரு கடற்படைச் சிப்பாயுடன் மீனவர்கள் தப்பிச் செல்ல முற்பட்டனர்.

அதனையடுத்துக் கடற்படையினர், இந்திய மீனவர்களின் படகு மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டு படகை வழி மறித்துக் கடற்படைச் சிப்பாயை மீட்டதுடன், படகில் இருந்த 13 மீனவர்களையும் கைது செய்தனர்.

அவர்களில் இருவர் துப்பாக்கிச்சூட்டுக் காயங்களுக்கு இலக்கான நிலையில் அவர்கள் பருத்தித்துறைப் பொலிஸார் ஊடாக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

ஏனைய 11 மீனவர்களையும் கடற்தொழில் நீரியல் வளத்துறையினர் ஊடாக பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## 12 பவுண்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சுமார் 12 பவுண் நகையைக் கொள்ளையடித்து சென்றுள்ளனர்.

யாழ். சுன்னாகம் பகுதியில் உள்ள வீடொன்றுக்கு நேற்று திங்கட்கிழமை சென்ற இருவர், வீட்டில் பொருத்தப்பட்டுள்ள சூரிய மின்கலத்தைப் (சோலார்) பழுது பார்க்க வந்துள்ளதாகக் கூறி பாசாங்கு செய்து வீட்டில் இருந்தவர்கள் மீது மயக்க மருந்தைத் தெளித்து அவர்கள் அணிந்திருந்த நகைகளைக் கொள்ளையடித்துச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்டவர்கள், சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ள நிலையில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## வெளிநாட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்தில் இருந்து இளைஞர் ஒருவரை வெளிநாடு அனுப்பி வைப்பதாகக் கூறி குறித்த ஆசிரியர் 68 இலட்சம் ரூபா பணத்தைப் பெற்றுள்ளார்.

அவர் நீண்ட காலமாக இளைஞரை வெளிநாடு அனுப்பி வைக்காதமையால் , பாதிக்கப்பட்ட இளைஞர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார்

முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், பணத்தைப் பெற்ற ஆசிரியரைக் கைது செய்து யாழ். நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்திய வேளை, இளைஞரிடம் பெற்ற முழுப் பணத்தையும் இளைஞரிடம் கையளிக்கிறேன் என மன்றில் கூறி பணத்தை இளைஞரிடம் மீளக் கையளித்தார்.

அதையடுத்து ஆசிரியரைப் பிணையில் செல்ல அனுமதித்த மன்று வழக்கை ஒத்திவைத்தது.

## காதலியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காதலி கத்தியால் குத்தியதில் பலத்த காயமடைந்த காதலன் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் உயிரிழந்தார் என்று வெல்லவாய பொலிஸார் தெரிவித்தனர்.

நாவலப்பிட்டியைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தந்தையான சுஜித் பிரதீப் குமார (வயது 31) என்பவரே உயிரிழந்துள்ளார்.

இறந்தவர் திருமணமானவர் என்றும், ஒரு குழந்தையின் தந்தை என்றும், அவரது மனைவி வெளிநாட்டுக்குச் சென்றுவிட்டார் என்றும் ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இறந்தவர், சந்தேகநபரான அந்தப் பெண்ணுடன் காதல் உறவில் இருந்தார் என்றும், அந்தப் பெண், வெல்லவாய, கொட்டவெஹெர பகுதியில் வாடகைக்கு விடுதி ஒன்றில் தங்கியிருந்தார் என்றும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

பொலிஸார் நடத்திய விசாரணையில், இறந்தவர் தனது காதலியின் விடுதி அறைக்குப் பலமுறை சென்றிருப்பதும், சம்பவம் நடந்த நாளில், விடுதி அறைக்குச் சென்றபோது, அவரது காதலி புதிய வேலைக்கான நேர்காணலுக்குச் செல்லப்போவதாகக் கூறியதும் தெரியவந்தது.

# கிளிநொச்சியில் விசேட சோதனை நடவடிக்கை



கிளிநொச்சு, ஜன 28

கிளிநொச்சி மாவட்டத்தின் பல்வேறு இடங்களிலும் அளவீட்டு அலகுகள் திணைக்களத்தினால் சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

குறித்த திணைக்களத்தினால் கிளிநொச்சி வட்டக்கச்சி சந்தைப்பகுதி மற்றும் பரந்தன், கண்டாவளை போன்ற பகுதிகளில் நேற்றும் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

உரிய காலத்தில் முத்திரையிடப்படாத மற்றும் அரச அனுமதியற்ற தராசுகள், திணைக்களத்தினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

மேலும் நெல் கொள்வனவின் போது அரச அனுமதியற்ற தராசைப் பயன்படுத்தி மோசடி செய்தமை கண்டுபிடிக்கப்பட்டதோடு அளவீட்டு அலகுகள் திணைக்கள அதிகாரிகளால் கிளிநொச்சி பொலிஸாரின் உதவியுடன் உரிய நடவடிக்கைகளும் மோசடிக்காரர்களுக்கெதிராக மேற்கொள்ளப்பட்டுள்ளன. (ஐ)

# நாமல் விடுத்த சவால்

கொழும்பு, ஜன 28

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ச, சரியான ஆதாரங்களுடன் எங்களை முடிந்தால் கைது செய்யுங்கள் என தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கத்திடம் பகிரங்கமாக சவால் விடுத்திருந்தார்.

நிதி மோசடி தொடர்பான குற்றச்சாட்டின் அடிப்படையில் நாமல் ராஜபக்ச வின் சகோதரர் யோஷித ராஜபக்ச அண்மையில் கைது செய்யப்பட்டு நேற்றைய தினம் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்தார்.

இதன்போது, நீதிமன்ற வளாகத்தில், கருத்து தெரிவித்திருந்த நாமல் ராஜபக்ச, அநுர குமார அரசாங்கம், வழக்குகளை ஜோடித்து சாட்சியங்களை உருவாக்கி பழிவாங்க முயற்சிப்பதாக குற்றம் சுமத்தியிருந்தார்.

அதேவேளை, யோஷித ராஜபக்ச கைது செய்யப்பட்டிருந்த விதமானது, பொதுவாக சாதாரண மக்களை கைது செய்யும் விதத்தை விட பாரபட்சமான வகையில் இருந்ததாகவும் பல்வேறு தரப்புகளில் இருந்தும் விமர்சனங்கள் எழுந்தன.

இந்நிலையில், தங்களை கைது செய்யுமாறு நாமல் ராஜபக்ச, பகிரங்கமாக தெரிவித்துள்ள போதிலும் அது தொடர்பில், அநுர அரசாங்கம் எதுவித நடவடிக்கைகளையும் ஏன் இன்னும் எடுக்கவில்லை என கேள்வி எழுகின்றது (ஐ)

## நிலைமையை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேரவையின் இந்த முடிவை எதிர்த்த கலைப்பீடாதிபதி பேராசிரியர் சி.ரகுராம் தனது பதவியிலிருந்து விலகுவதாக அறிவித்திருந்தார். அதனைக் காரணமாக வைத்து யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் இன்று முதல் விரிவுரைகளைப் பகிஷ்கரித்தனர்.

ஐந்து கோரிக்கைகளை முன் வைத்து ஆசிரியர் சங்கம் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டதையடுத்து, அவர்களின் கோரிக்கை குறித்து சாதகமான முடிவுகள் துணைவேந்தரால் அறிவிக்கப்பட்டது. எனினும், துணைவேந்தரின் முடிவுகளைப் பேரவைக் கூட்டமொன்றின் மூலம் உறுதிப்படுத்த வேண்டும் என்று பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் வேண்டுகோள் விடுத்ததை அடுத்தே நாளை மாலை விசேட பேரவைக் கூட்டத்துக்குப் பதிவாளர் அழைப்பு விடுத்துள்ளார்.

## மொட்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்திப்பு நடைபெற்றது. கொழும்பு, விஜேராம வீதியிலுள்ள முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நேற்று இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இதன்போது, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களும், சிலிண்டர் சின்னத்தில் கடந்த பொதுத்தேர்தலில் தேர்தலில் போட்டியிட்ட சிலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இந்தச் சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பிரேமலால் ஜயசேகர, தற்போது மஹிந்த ராஜபக்ஷவுடன் தொடர்புடையவர்களைக் கைது செய்வதற்கான சதிகள் இடம்பெறுகின்றன என்று தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பின்போது, எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பிலும் மேலும் பல விடயங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டன என்றும் பிரேலால் ஜயசேகர மேலும் கூறினார்.

# இந்திய மீனவர்களை பார்வையிட்ட துணைத்தூதுவர்



கிளிநொச்சு, ஜன 28

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை கடற்பரப்பில் இன்று அதிகாலை அத்துமீறி நுழைந்த இந்திய மீனவர்கள் இருவர் இலங்கை கடற்படையினர் நடத்திய துப்பாக்கி பிரயோகத்தில் இருவர் காயமடைந்தனர்.

காயமடைந்த இருவரும் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். பருத்தித்துறை கடற்பரப்பில் 13 இந்திய மீனவர்களுடன் படகொன்று அத்துமீறி நுழைந்து மீன்பிடியில் ஈடுபட்டது.

இந்திய மீனவர்களின் படகில் ஏறி அவர்களை கைது செய்ய கடற்படை வீரர் முயற்சித்துள்ளார். இதன்போது கடற்படை வீரரை ஏற்றிக்கொண்டு மீனவர்களின் படகு தப்பிச்செல்ல முற்பட்டுள்ளது.

இதனையடுத்து ரோந்து படகில் சென்ற இலங்கை கடற்படையினர் நடத்திய துப்பாக்கி பிரயோகத்தில் மீனவர்கள் இருவர் காயமடைந்தனர்.

கைதான மீனவர்களை கடற்றொழில் நீரியல் வள திணைக்களம் பொறுப்பேற்க மறுத்துள்ள நிலையில், பருத்தித்துறை பொலிஸாரிடம் இந்திய மீனவர்கள் ஒப்படைக்கப்பட்டனர்.

காயமடைந்த இந்திய மீனவர்களை யாழ்ப்பாண இந்திய துணைத்தூதுவர் சாய்முரளி பார்வையிட்டுள்ளதுடன், அவர்களை நாட்டிற்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகின்றது. (ஐ)

## குளவிகள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயிரிழந்துள்ளார். புசல்லாவை, பிளக்பொரஸ்ட் தோட்டத்தில் நேற்று பாடசாலைக்குச் சென்று பெற்றோருடன் வீடு திரும் பிய மாணவர்கள் குளவிக்கொட்டுக்கு இலக்காகியுள்ளனர்.

அந்த மாணவர்கள் கம்பளை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில், தரம் 4 இல் கல்வி பயிலும் மாணவன் ஒருவர் சிகிச்சை பலனின்றி இன்று காலை உயிரிழந்துள்ளார்.

சம்பவம் பற்றிய மேலதிக விசாரணைகளை புசல்லாவை மற்றும் கம்பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.


முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City
எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!
இயற்கையான சூழலில் உ ங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!
உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்
முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்
SUPERMARKET
4th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd
தொடர்புகளுக்கு: 0777 43 5557


JRIDE
இலங்கையின் பயணிகள் செயலி
SRI LANKA'S
TAXI APP FROM JAFFNA
5%
இப்போது நாம்
இலங்கை முழுவதும்
காத்திருப்புக்கு விடுதலை!
www.jride.lk
மகிழ்ச்சியான பாதுகாப்பான பயணம் திருப்தியான கட்டணம்!